Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 8/2016 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW2 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | தௌலத் நிஷா |
| Father's Name | – | |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | காவல் ஆய்வாளர் |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 6th September 2022.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது கோவை மாநகர கிழக்கு அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.08.2013 ல் நான் பொள்ளாச்சி கிழக்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இரவு ரோந்து அலுவலாக இருந்தபோது அதிகாலை 19.08.2013 அன்று சுமார் 4 மணிக்கு ஆய்வாளர் திரு.சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் இரவு ரோந்து காவலர்கள் வாகன தணிக்கை மேற்கொண்டோம்.

அப்போது கோவை முதல் பொள்ளாச்சி சாலையில் நல்லப்பா தியேட்டர் முன்புறம் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது ஒரு டாரஸ் லாரி AP 26 X என்ற பதிவு எண் கொண்ட லாரியை ஓட்டி வந்த நபர்கள் எங்களை பார்த்ததும் (பதிவு எண் எனக்கு நினைவில்லை) மேற்படி வாகனத்தினை நிறுத்திவிட்டு வாகனத்தினை ஓட்டி வந்த 2 நபர்கள் கீழே இறங்கி ஓடிவிட்டார்கள்.

பிறகு மேற்படி வாகனத்தில் என்ன உள்ளது என்று ஆய்வாளர் தலைமையில் சோதனையிட்டபோது மேற்படி வாகனத்தில் சுமார் 6 டன் செம்மரங்கள் அடிக்கி வைக்கப்பட்டிருந்தது. பிறகு மேற்படி வாகனத்தினை மகாலிங்கபுரம் காவல் நிலையத்திற்கு ரோந்து காவலர்கள் மூலமாக காவல் ஆய்வாளர் அனுப்பி வைத்தார்.

நான் எனது காவல்நிலைய எல்லைக்குள் தொடர்ந்து ரோந்து பணி மேற்கொண்டேன். 2 நாட்கள் கழித்து செம்மரக்கட்டைகள் கடத்தலில் ஈடுபட்ட நபர்களை ஆய்வாளர் அவர்கள் பிடித்து வனத்துறையினரிடம் ஒப்படைத்தார். காவல் ஆய்வாளர் மற்றும் வனத்துறையினர் என்னை விசாரித்தார்கள்.

1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவம் நடைபெற்ற போது நான் பொள்ளாச்சி கிழக்கு காவல் நிலையத்தில் பணியில் இருந்தேன் என்றும், மேற்கு காவல் நிலைய ஆய்வாளருடன் சேர்ந்து ரோந்து பணி மேற்கொள்ள உத்தரவு ஏதேனும் இருந்ததா என்றால் வழக்கமாக இரவு ரோந்து பணியின் போது அன்றைய ரோந்து ஆய்வாளர் பொள்ளாச்சி உட்கோட்டத்திற்கு உட்பட்ட காவலர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்களை உட்கோட்டத்திற்கு உட்பட்ட ஏதேனும் ஒரு பகுதியில் வாகன தணிக்கை செய்ய உத்தரவிடுவார்கள்.

19.08.2013 அன்று பொள்ளாச்சி மேற்கு காவல் ஆய்வாளர் அவர்கள் தான் இரவு

ரோந்து பணிக்கு நியமிக்கப்பட்டார் என்றால் சரிதான், மேற்படி யாருடைய உத்தரவின்பேரில் காவல் ஆய்வாளர் நியமிக்கப்பட்டார் என்றால் உயர் அதிகாரிகள் உத்தரவின் பேரில் நியமிக்கப்பட்டார்.

19.08.2013 அன்று வாகன சோதனைக்கு சென்றபோது எங்களுடன் வேறு எந்த காவலர்கள் வந்தார்கள் என்றால் தற்போது எனக்கு அவர்கள் பெயர் நினைவில்லை. சுமார் 10 பேர் சென்றோம். மேற்படி வாகனத்தில் இருந்த 2 நபர்கள் வாகனத்தில் இருந்து கீழே இறங்கி ஓடியபோது அவர்களை பிடிக்க முயற்சி செய்தோமா என்றால் முயற்சி செய்தோம்.

மேற்படி 2 நபர்கள் எந்த திசையினை பார்த்து ஓடினார்கள் என்றால் நினைவில்லை. மேற்படி 2 நபர்களை காவலர்கள் யாரும் துரத்தி சென்றார்களா என்றால் சென்றார்கள், ஆனால் அவர்கள் பெயர்கள் நினைவில்லை. மேற்படி ஓடிய 2 நபர்களை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

பின்னிட்டு கைப்பற்றப்பட்ட லாரியை யார் எடுத்து சென்றார்கள் என்றால் காவலர் ஒருவர் எடுத்து சென்றார். அவர் யார் என்று நினைவில்லை. மேற்படி லாரியை மகாலிங்கபுரம் காவல்நிலையத்திற்கு எடுத்து செல்ல காரணம் என்னவென்றால் மேற்படி காவல் நிலையத்தில் போதிய இடவசதி இருப்பதால் தான் அங்கு எடுத்து சென்றார்கள்.

மேற்படி லாரியினை பிடித்தபோது அதில் செம்மரக்கட்டைகள் இருந்த விவரம் எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான். மேற்படி லாரியினை மகாலிங்கபுரம் காவல்நிலையத்தில் யாரிடம் ஒப்படைத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், ஆய்வாளர் தான் ஒப்படைத்தார், அப்போது மகாலிங்கபுரம் காவல்நிலையத்தில் யார் இ,ருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

பின்னிட்டு இவ்வழக்கு பற்றிய விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பின்னிட்டு 2 நாட்கள் கழித்து மேற்படி வழக்கு சம்பந்தமான எதிரிகளை காவல் ஆய்வாளர் கைது செய்துள்ளார் என்று நான் கேள்விப்பட்டு தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான்.

இவ்வழக்கு சம்பந்தமாக வனத்துறையினர் என்னை 19.08.2013 ம் தேதிக்கு பிறகு 2 நாட்கள் கழித்து விசாரணை செய்தார்கள். எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் எனக்கு நினைவில்லை.

நான் சொல்வது போல் 19.08.2013 அன்று சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் லாரி எதனையும் நாங்கள் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் உயர் அதிகாரிகள் கேட்டுகொண்டதிற்கு இணங்க புள்ளி விவர கணக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

(1,2 எதிரிகளின் குறுக்குவிசாரணையினை அப்படியே ஏற்றுக்கொள்வதாக 3 முதல் 6 வரையிலான எதிரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது)

மறுவிசாரணை

இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

ஒம்/-ஈ.மணிகண்டன்,பிஏ,பிஎல்
நீதித்துறை நடுவர் எண்.2
பொள்ளாச்சி.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 8/2016 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | பாலகிருஷ்ணன் |
| Father's Name | – | |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 6th September 2022.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக இருந்து ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 19.08.2013 அன்று இரவு ரோந்து பணியில் இருந்தபோது பொள்ளாச்சி மேற்கு காவல் ஆய்வாளர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தோம்.

நான் அப்போது மகாலிங்கபுரம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தேன். மேற்படி தணிக்கையில் எங்களுடன் கிழக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் தௌலத் நிஷா மற்றும் தலைமை காவலர்கள் ஏசு பாலன், சம்பத்குமார், சுந்தர்ராஜன், ரவி மற்றும் மேற்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் மற்றும் ஒருசில தலைமைக் காவலர்களும் எங்களுடன் இணைந்து ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தோம்.

அப்போது காலை சுமார் 04.00 மணிக்கு நல்லப்பா தியேட்டர் ஜங்ஷன் ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி டாரஸ் லாரி AP X (பதிவு எண் தற்போது நினைவில்லை) என்ற லாரியினை சோதனை செய்தபோது அதில் சுமார் 6-7 டன் எடையுள்ள செம்மரக்கட்டைகள் இருந்தது.

மேற்கண்ட லாரியினை ஓட்டிய நப ர்கள் லாரியினை நிறுத்திவிட்டு அங்கிருந்து ஓடி விட்டார்கள். இது சம்பந்தமாக ஆய்வாளர் அவர்கள் VHF வாக்கிடாக்கி மூலமாக அனைத்து காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார். பின்னர் செம்மரக்கட்டைகளுடன் மேற்கண்ட லாரியினை மகாலிங்கபுரம் காவல்நிலையத்தில் பாதுகாப்பு கருதி நிறுத்தி வைக்கப்பட்டது.

21.08.2013 அன்று நல்லப்பா தியேட்டர் ஜங்ஷனில் இரவு 8 மணியளவில் வாகன தணிக்கை செய்தபோது (சாட்சி மீண்டும் காலை 8 மணி என்று தெரிவிக்கிறார் ) இனோவா கார் KL 41 B 2626 என்ற பதிவு கொண்ட கார் ஒன்று வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த வாகனத்தினை ஆய்வாளர் சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் தலைமைக்காவலர்கள் ஏசு பாலன் மற்றும் சம்பத் மற்றும் சிலர் காவலர்கள் தணிக்கை செய்தபோது காரின் ஓட்டுநரை விசாரித்தபோது தன் பெயர் ரவி என்றும், இதற்கு முன்பு 19.08.2013 அன்று மேற்கண்ட டாரஸ் வண்டியை நிறுத்திவிட்டு ஓடிய நபர் என்றும், கேரளாவில் தங்கியிருந்துவிட்டு மொத்தம் 6 நபர்களுடன் மேற்படி லாரியை பார்க்க வந்ததாக தெரிவித்தார்கள்.

பின்னர் மேற்கண்ட எதிரிகளை மகாலிங்கபுரம் காவல் நிலையத்திற்கு அவர்கள் ஓட்டி வந்த காருடன் காவல் ஆய்வாளர் அழைத்து சென்றார். தற்போது எதிரிகளில் ஒரு சில எதிரிகளை பார்த்தால் அடையாளம் தெரியும். ஆஜர் எதிரி மேற்படி 21.08.2013 ம் தேதியன்று

காரில் இருந்த நபர் ஆவார். (**2 முதல் 6 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில்லை குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது**). நடந்த சம்பவம் குறித்து வனத்துறையினர் என்னை விசாரித்தனர்.

1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

19.08.2013 அன்று இரவு நேர ரோந்து பணிக்கு எனக்கு உத்தரவு வழங்கப்பட்டதா என்றால் VHF வாக்கிடாக்கி மூலம் வாய்மொழி உத்தரவு வழங்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட டாரஸ் லாரி தார் பாய் போட்டு கட்டப்பட்டிருந்தது. மேற்படி லாரியில் இருந்து 2 நபர்கள் ஓடி சென்றபோது அவர்களை பிடிக்க முயற்சி செய்தோமா என்றால் செய்தோம், ரவி மற்றும் சுந்தர்ராஜ் ஆகியோர்கள் ஓடினார்கள். அவர்கள் பின்னால் நானும் சிறிது துூரம்ஓடினேன்.

மேற்படி 2 நபர்களும் வடக்கு நோக்கி ஓடிசென்றார்கள். அவர்களை எனினும் பிடிக்க முடியவில்லை. அப்போது மேற்படி ஓடிய 2 நபர்களையும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி ஓடிய 2 நபர்களில் யார் ஒட்டுநர் யார் கிளினர் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

மேற்படி லாரியில் இருந்த தார் பாயினை எப்போது கழட்டி பார்த்தோம் என்றால் மேற்படி 2 நபர்கள் ஓடிய பிறகு சந்தேகத்தின் பேரில் தான் பார்த்தோம். மேற்படி லாரியை யார் மகாலிங்கபுரம் காவல் நிலையத்திற்கு எடுத்து சென்றார்கள் என்றால் ஒரு காவலர் தான் எடுத்து சென்றார். அவர் பெயர் நினைவில்லை.

லாரியினை மகாலிங்கபுரம் காவல் நிலையத்தில் நிறுத்தும்போது, காவல் நிலைய பொறுப்பில் யார் இருந்தார்கள் என்றால் தலைமைக் காவலர் ஒருவர் இருந்தார், அவர் பெயர் நினைவில்லை. மேற்படி லாரியை அங்கு நிறுத்திவிட்டு காவல் நிலைய சென்ட்ரியிடம் ஒப்படைத்து விட்டு சென்றார்கள் என்றால் சரிதான்.

மேற்படி லாரியினை மகாலிங்கபுரம் காவல்நிலையத்தில் நிறுத்தியது சம்பந்தமாக எனது காவல் நிலைய ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றால் சரிதான். 21.08.2013 அன்று காவல் நிலைய பணியில் இருந்தேன். 19.08.2013 அன்றோடு இரவு தணிக்கை தொடர்பாக காவல் ஆய்வாளர் திரு.சுப்பிரமணியம் அவர்களின் பணி முடிந்துவிட்டது.

21.08.02013 அன்று மேற்கு காவல் நிலைய ஆய்வாளர் சுப்பிரமணியம் அவர்கள் கிழக்கு காவல் நிலைய ஆய்வாளர் அவர்களிடம் கேட்டுக்கொண்டதின் பேரில் மேற்கு காவல் நிலைய ஆய்வாளர் அழைத்தால் உடன் செல்ல வாய்மொழி உத்தரவிட்டார்.

21.08.2013 அன்று நல்லப்பா தியேட்டர் அருகில் வர எனக்கு யார் கூறினார்கள் என்றால் அப்போது எனது காவல் நிலையத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் அவர்கள் தான் என்னிடம் கூறினார். நான் நல்லப்பா தியேட்டர் ஜங்ஷன்அருகில் வந்தபோது அங்கே மேற்கு காவல் நிலைய ஆய்வாளர் திரு.சுப்பிரமணியம் மற்றும் உதவி ஆய்வாளர் தௌலத் நிஷா அங்கிருந்தார்கள் மற்றும் சுமார் 6 காவலர்கள் அங்கிருந்தார்கள்.

நான் வந்த பின்பு 10 நிமிடங்கள் கழித்து தான் காரினை பிடித்தோம். மேற்படி காரினை யார் ஓட்டி வந்தார்கள் என்றால் ரவி என்பவர் ஓட்டி வந்தார். மேற்படி காரில் இருந்த 6 நபர்களையும் கைது செய்தோமா என்றால் நல்லப்பா தியேட்டர் ஜங்ஷனில் வைத்து கைது செய்தோம்.

வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எங்கு தயாரிக்கப்பட்டது என்று எனக்கு நினைவில்லை. கைது செய்யப்பட்ட 6 நபர்களையும் எந்த வாகனத்தில் அழைத்து சென்றார்கள் என்றால் எனக்கு தெரியாது. எதிரிகள் ஓட்டி வந்த காரினை யார் எடுத்து சென்றார்கள் என்றால் காவலர் தான் எடுத்து சென்றார்.

எதிரிகளை காவல் நிலையத்தில் வைத்து காவல் ஆய்வாளர் விசாரித்தாரா என்றால் விசாரித்தார். பின்னிட்டு அன்று 12 மணிக்கு நல்லப்பா தியேட்டர் அருகே உள்ள குடோனுக்கு காவல் ஆய்வாளர் சுப்பிரமணியம், ஏசுபாலன் ஆகியோர் சென்றோம். அங்கு காவல்ஆய்வாளர் சுப்பிரமணியம் லாரியில் இருந்த செம்மரக்கட்டைகளை குடோனில் அடிக்குவதற்காக ஒப்படைத்துவிட்டு அதன்படி ஆட்களை வைத்து அடிக்கினார்கள்.

லாரியை குடோனுக்கு யார் எடுத்து வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. குடோனில் செம்மரக்கட்டைகளை அடிக்கிவிட்டு லாரியை எடுத்து வந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்பந்தமாக வனத்துறையினர் 21.08.2013 தேதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் என்னை விசாரித்தார்கள்.

பின்னிட்டு எதிரிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 19.08.2013 அன்று காலை தணிக்கை செய்யப்பட்டது என்றும், நான் அப்போது அங்கு இல்லை என்றாலும், தப்பி ஓடிய நபர்களை நான் பிடிக்க சென்றோம் என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

21.08.2013 அன்று எதிரிகளை கைது செய்தபோது நான் உடனில்லை என்றாலும், உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதிற்கு இணங்க புள்ளி விவர கணக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

(1,2 எதிரிகளின் குறுக்குவிசாரணையினை அப்படியே ஏற்றுக்கொள்வதாக 3 முதல் 6 வரையிலான எதிரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது)

மறுவிசாரணை

இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

ஒம்/-ஈ.மணிகண்டன்,பிஏ,பிஎல்
நீதித்துறை நடுவர் எண்.2
பொள்ளாச்சி.